# மூலிகை வளர்ப்போம் பயன் பெறுவோம்



## கத்ரிப்பாச்சி

தாவரவியல் பெயர்- *Pogostemon heyneanus* Benth.

*P. patchouli* Hook. f.

குடும்பம் - LAMIACEAE சிங்கள பெயர் - கொள்ளன் கொள

சமஸ்கிருத பெயர் - தமாளபத்ர

தமிழ் பெயர் -கத்ரிப்பாச்சி
ஆங்கில பெயர்- பால்ஸ் பச்சோலி

நடுகைப் பாகம்- விதை மற்றும் தண்டுத்துண்டு

மருந்தாகப் பயன்படும் பாகங்கள் -இலைகள், வேர்கள் மற்றும் முழு தாவரமும் பயன்படுத்தப்படுகிறது

தாவரவியல் விளக்கம்

தண்டு 1.72 மீட்டர் உயரமான புதர் செடியாகும்.மிகவும் நீளமான சமாந்தரமான கிளைகளாகவும் .அரை ஏறு வரிசையாகவும் காணப்படும்.இலைகள் முட்டை வடிவில் இருந்து ஓவேட்-ரோம்பிக் வரை இருக்கும்.இலை கூர்மையானது முதல் மழுங்கிய நுனியுடன் கூடிய பல் கொண்டவை.மலர்கள் வெள்ளை அல்லது நீல வெள்ளை.

ஜனவரி முதல் அக்டோபர் வரை பூக்கள் பூக்கும்.

இலங்கையின் மிகவும் வறண்ட வலயத்தைத் தவிர மற்ற பகுதிகளில் வளரும்.பொதுவாக மலைக் காடுகளில் அடிச்செடியாகக் காணப்படும். குறிப்பாக ஹக்கல வனப் பகுதியில் இது பொதுவானது. மேற்கில் இருந்து தென்னிந்தியா வழியாகவும், இலங்கையிலிருந்து மலேசியா வரையிலும் பரவியுள்ளது.

இந்த மருந்து மிகவும் அரிதானது மற்றும் விலை உயர்ந்தது என்பதால், இது போலி இலைகளுடன் கலந்து சந்தைக்கு அனுப்பப்படுகிறது.

கை மருந்தாக -
காயங்கள் - இலைகளை அரைத்து காயத்துக்கு பூசுதல்
உடல் துர்நாற்றம் -இலைகளை உலர்த்தி புகைபிடிக்கப்படுகின்றது.
தேள் விஷம் -கொல்லன் இலை,,தொட்டால் சுருங்கி போன்ற செடிகளின் வேர்களை சம அளவில் எடுத்து அரைத்துக் கரைத்து அடுப்பில்

வைத்து சூடாக்கி வரும் புகையை தேள் கொட்டிய காயத்தின் வாயில் பிடித்து பின்னர் அரைத்து எடுத்த கல்கத்தை கடி வாயில் பூச வேண்டும்.

விவசாய விஞ்ஞான தகவல்

நறுமணம் மிக்க ஆவியாகும் எண்ணெய் பொருட்கள் இருப்பதால், பூச்சிகளைக் கட்டுப்படுத்த, பூஞ்சைகளைக் கொல்லப் பயன்படுகிறது

கித்துள் பூக்களாலான வெட்டுகளுக்கு மருந்து கட்ட பயன்படுத்தப்படுகிறது.

துணியை பூச்சிகளிடமிருந்து பாதுகாக்க உலர்ந்த இலைகள் துணிக்கு இடையில் வைக்கப்படுகின்றன.

எண்ணெய் வாசனையூட்ட பயன்படுத்தப்படுகிறது.

தண்டு துண்டுகளை நடுவதால் அதிக விளைச்சலை பெறலாம். விதைகளில் இருந்து செடிகளை உருவாக்கும் போது, பூக்கள் காய்ந்த பிறகு, விதைகளை எடுத்து, மணல்:மேல் மண்:சாணம் 1:1:1 எனும் கலவையில் நட வேண்டும். சுமார் 30 நாட்களுக்குப் பிறகு, நாற்றுகளை 30 செ.மீ இடைவெளி விட்டு நிலத்தில் நடலாம்

அறுவடை மற்றும் சேமிப்பு

தண்ணீர் நன்றாக வழங்கப்பட வேண்டும். நட்டு 4 மாதங்களில் அறுவடை செய்யலாம். அறுவடை செய்யப்பட்ட இலைகளை காற்று புகாதவாறு வைக்க வேண்டும்.

தொகுப்பு
வைத்தியர் சமில வீரசிங்க
ஆயுர்வேத சமூக சுகாதார வைத்திய அதிகாரி
பாத்த தும்பர.

தமிழாக்கம்
வைத்தியர் நுஸ்ரத் பானு
ஆயுர்வேத சமூக சுகாதார வைத்திய அதிகாரி
அம்பகமுவ.